பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**03 06 2026** **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

## தலைப்புச் செய்திகள்

1. பழங்குடியினர் மேம்பாட்டுக்கான அரசு திட்டங்களின் பயன்கள் கடைக்கோடி கிராமங்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தியுள்ளார்.

2. சிறப்பான கொள்கைகள் மற்றும் திட்டங்களால் சூரியசக்தி மின்உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்திற்கு முன்னேறியிருப்பதாக மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

3. புதுதில்லி மால்வியா நகர் உணவகத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் 20-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளார்.

4. **Hormuz** நீரிணையை தடையின்றி பயன்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு சீனா ஒத்துழைப்பு தர வேண்டும் என்று அமெரிக்கா கேட்டுக்கொண்டுள்ளது.

5. **18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

நாட்டில் உள்ள பழங்குடியின மக்கள் வளமான கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் கொண்டிருப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுக்கான அமைப்புகள் மற்றும் திட்டங்களை வலுப்படுத்துவது குறித்த தேசிய மாநாட்டை தொடங்கிவைத்து பேசிய அவர், பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி அவர்கள் வளர்ச்சிப் பாதையில் செல்வதற்கான பல திட்டங்களை அரசு மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

திட்டங்களின் பயன்கள் கடைக்கோடி கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் சென்றடைய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

சில பகுதிகளில் வசிக்கும் பழங்குடியின மக்கள் அரசின் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு இல்லாமல் இருப்பதாகவும், அவர்களுக்கும் திட்டங்களின் பயன்களை கொண்டு சேர்க்க வேண்டும் என்றும் திருமதி திரௌபதி முர்மு வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>

சுதந்திரப் போராட்ட வீரரும், கல்வியாளருமான வி வி எஸ் ஐயரின் நினைவுநாளையொட்டி, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஐயர் வீர தீரம் மிக்க சுதந்திரப்போராட்ட வீரராக திகழ்ந்தார் என்றும், தமிழ் இலக்கியத்திற்கு அவர் அளித்த பங்களிப்பு போற்றுதலுக்குரியது என்றும் கூறியுள்ளார்.

வி வி எஸ் ஐயரின் வாழ்க்கை இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளதாகவும் திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

சூரியசக்தி மின் உற்பத்தியில் இந்தியா இரண்டாவது இடத்திற்கு முன்னேறியுள்ளது.

கடந்த ஆண்டில் இரண்டாவது இடத்தில் இருந்த அமெரிக்கா மூன்றாவது இடத்திற்கு சென்றுள்ளது.

சூரிய மின்சக்தி உற்பத்தியில் சீனா முதலிடத்தில் உள்ளது.

இதுதொடர்பாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி வெளியிட்டுள் சமூக வலைதள பதிவில்,

இந்தியாவின் இந்த சாதனை, மத்திய அரசின் முறையான கொள்கை மற்றும் திட்டமிடலால் சாத்தியமானது என்று தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, தூய்மை எரிசக்தியை ஊக்குவிப்பதற்காக சூரிய மின்சக்தித் திட்டங்களை கொண்டுவந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எரிசக்தி பாதுகாப்பையும் இது உறுதி செய்துள்ளதாகவும் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறினார்.

<<<<<<>>>>>

உலக சைக்கிள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

எளிமையான, எரிபொருள் செலவில்லாத சுற்றுச்சூழலுக்கு உகந்த போக்குவரத்து சாதனமாக உள்ள சைக்கிள் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில், ஆண்டுதோறும் இந்நாள் உலக சைக்கிள் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

துர்க்மெனிஸ்தான் நாடு முன்மொழிந்ததை ஏற்றுக்கொண்டு ஐ நா பொதுச்சபையில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

''பசுமையான எதிர்காலத்திற்கான சைக்கிள் பயணம்'' என்ற கருப்பொருளுடன் இவ்வாண்டு உலக சைக்கிள் தினம் கொண்டாடப்படுகிறது.

உலக சைக்கிள் தின வாழ்த்துகளை தெரிவித்துள்ள மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, ஆரோக்கியமான, பசுமையான தேசத்தை உருவாக்க இளைஞர்கள் சைக்கிளை பயன்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள காணொலி பதிவில், சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு இல்லாத சைக்கிள் பயணம் சம நிலையான வாழ்க்கை முறையையும் உறுதி செய்வதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியாவுக்கான திட்டங்களை வடகிழக்கு மாநிலங்களில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருவதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

மிசோரம் மாநிலம் **Kolasib** மாவட்ட வளர்ச்சி மன்ற கூட்டத்திற்கு தாம் தலைமை வகித்ததை சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ள டாக்டர் எல். முருகன், இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அரசின் திட்டங்கள் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கு உத்வேகம் அளித்து வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

புதுதில்லி மால்வியா நகர் உணவகத்தில் இன்று நண்பகல் ஏற்பட்ட தீ விபத்தில் 20-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

தீயணைப்பு வீரர்கள் உடனடியாக வந்து தீயை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

தீயில் சிக்கியவர்களை விரைவாக மீட்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

<<<<<<>>>>>

ஆரவல்லி மலைத்தொடர் குறித்து மத்திய அரசு தயாரித்த அறிக்கையை ஆய்வு செய்வதற்காக உச்சநீதிமன்றம் உயர்மட்ட நிபுணர் குழுவை அமைத்துள்ளது.

வன ஆராய்ச்சி மற்றும் கல்வி குழுமத்தின் தலைமை இயக்குநர் காஞ்சன் தேவி தலைமையிலான இக்குழு, மத்திய அரசு

அனுப்பியுள்ள அறிக்கையை ஆய்வு செய்து, வரும் ஆகஸ்ட் மாதம் 31-ஆம் தேதிக்குள் அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எவ்வித சமரசத்திற்கும் உட்படாமல் அறிவியல் பூர்வமாக அனைத்துப் பிரச்சினைகளையும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும், ஆரவல்லி மலைத்தொடரின் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான பரிந்துரைகளையும் அறிக்கையில் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆரவல்லி மலைப்பகுதியில் சுரங்கப் பணிகளுக்கு அனுமதி அளிப்பதால் சுற்றுச்சூழலுக்கு ஏதேனும் பாதிப்பு உள்ளதா என்பதையும் தெரிவிக்க வேண்டும் என்று உச்சநீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<<<>>>>>

பிரதமரின் வங்கிக் கணக்குத் திட்டம் தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இம்மாவட்டத்தின் முன்னோடி வங்கியான இந்தியன் வங்கி மூலம் அதிக அளவில் ஜன்தன் வங்கிக் கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக அந்த வங்கியின் பொது மேலாளர் திருமதி லில்லிபாய் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — லில்லி பாய் - 39 Sec. )***

ஜன்தன் வங்கிக்கணக்கை தாம் தொடங்கியதன் மூலம் அரசின் நலத்திட்ட உதவிகளை நேரடியாக பெற முடிவதாகவும், கடனுதவி பெறுவதற்கு வசதியாக உள்ளதாகவும் பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

***(Sound Byte — பயனாளி — 22 Sec. )***

<<<<<<>>>>>

**Hormuz** நீரிணையை கப்பல்கள் தடையின்றி கடந்து செல்வதற்கு சர்வதேச அளவில் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு சீனா ஒத்துழைப்பு தர வேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு மார்கோ ரூபியோ வலியுறுத்தியுள்ளார்.

வாஷிங்டனில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஈரானுக்கு, சீனா ராணுவ உதவி செய்ததாக கூறப்படும் தகவலில் உண்மை இல்லை என்றும் தெளிவுபடுத்தினார்.

ஈரானுக்கும், சீனாவுக்கும் இடையே பல ஆண்டுகளாக உறவு நீடித்துவரும் நிலையில், சீன ஆயுதங்களை அந்நாடு கொள்முதல் செய்து வைத்திருந்ததாகவும் அவர் கூறினார்.

இருநாடுகள் இடையே நீண்டகால உறவு நீடித்துவரும் நிலையில், போர் சூழலை பொறுத்தமட்டில் சீனா சற்று விலகியே இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஐ நா அமைப்பில் சீனா ஆக்கப்பூர்வமாக பங்களிக்க வேண்டும் என்றும் **Hormuz** நீரிணையை தடையின்றி பயன்படுத்துவதற்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் திரு மார்கோ ரூபியோ கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

பக்ரைன் மற்றும் குவைத்தில் உள்ள அமெரிக்க ராணுவ நிலைகளை குறிவைத்து ஈரான், ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதலை நடத்தியுள்ளது.

ஈரான் நாட்டின் எண்ணெய் கப்பல் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தியதையடுத்து, ஈரான் இந்த பதில் தாக்குதலை நடத்தியதாக தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

**18** வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை ஹாக்கிப் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜப்பானில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், இந்தியா **25-0** என்ற கோல் கணக்கில் சிங்கப்பூரை வென்றது.

-------------------

இந்தோனேஷியா ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் ரோஹன் கபூர் — ருத்விகா ஷிவானி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஜகார்த்தாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் கலப்பு இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-14, 21-14 என்ற செட் கணக்கில், தைவானின் Po Hsuan Yang — Ling Fang Hu இணையை வென்றது.

------------------

தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று பூட்டானை எதிர்கொள்கிறது.

கோவாவில் இப்போட்டி இரவு 8 மணிக்கு தொடங்குகிறது.

<<<<<<END>>>>>>